**ஜூலை – 15**

# TNPSC துளிகள்

- தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மற்றும் அமெரிக்காவின் சிகாகோவின் சர்வதேச தமிழ் மொழி அறக்கட்டளை இணைந்து வெளியிடும் 'Tirukkural - Treasure of Universal Wisdom' என்ற புத்தகத்தினை தமிழக முதல்வர் வெளியிட்டார்.
- யூடியூப் பிரபலமும் ஒரு நடிகருமான பிரஜக்தா கோலி, டைம் இதழின் முதலாவது TIME100 படைப்பாளர்கள் பட்டியலில் இடம் பெற்ற முதல் இந்தியப் படைப்பாளி என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- வருவாய்ப் புலனாய்வு இயக்குநரகம் (DRI) ஆனது, "ஃபயர் டிரெயில்" என்ற குறியீட்டுப் பெயரில் நடவடிக்கையினை மேற்கொண்டு பெரிய அளவிலான சீனப் பட்டாசுகளை வெற்றிகரமாகக் கண்டுபிடித்துப் பறிமுதல் செய்தது.
- மின்கல உற்பத்தி மற்றும் புதிய எரிசக்தி தொழில்நுட்ப சுற்றுச்சூழல் அமைப்பில் தம் மாநிலத்தின் தலைமைத்துவத்திற்காக என தெலுங்கானா மாநில அரசானது இந்தியா எரிசக்தி சேமிப்புக் கூட்டணியின் (IESA) 2025 ஆம் ஆண்டு தொழில் சிறப்பு விருதினைப் பெற்றது.
- உத்தரகாண்ட் மாநிலத்தின் காவல்துறையானது, தங்களை மதப் துறவிகள் என்று பொய்யாகக் வெளிப்படுத்தி மக்களின் நம்பிக்கையை தவறாகப் பயன்படுத்தும் நபர்கள் மீது 'காலனேமி' என்ற மாநில அளவிலான அடக்குமுறை நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- இடிக்கப்பட்ட பிறகு மீண்டும் கட்டமைக்கப்பட்ட மும்பையின் புகழ்பெற்ற கர்னாக் பாலம் ஆனது, இந்திய ஆயுதப்படைகளின் செயல்பாட்டின் வெற்றியைக் கருத்தில் கொண்டு, ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் பெயரால் மறுபெயரிடப்பட்டுள்ளது.
- ஜம்மு காஷ்மீரில் ஸ்ரீஅமர்நாத் யாத்திரை மிகப் பாதுகாப்பாகவும் சுமூகமாகவும் நடத்தப் படுவதை உறுதி செய்வதற்காக இந்திய இராணுவம் ஆனது ஆபரேஷன் ஷிவா 2025 என்ற நடவடிக்கையினைத் தொடங்கியுள்ளது.
- மனித உடலில் புரதத்தின் செயல்பாடுகள் பற்றிய புரிதலை விரைவுபடுத்துவதற்காக வடிவமைக்கப் பட்ட BioEmu என்ற ஒரு செயற்கை நுண்ணறிவு அமைப்பினை மைக்ரோ சாப்ட் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- கூகுள் நிறுவனமானது, இந்தியாவில் பயிர்க் கண்காணிப்பு மற்றும் கள அளவிலான தரவுப் பகுப்பாய்வை மேம்படுத்துவதற்காக வேளாண் கண்காணிப்பு மற்றும் நிகழ்வு கண்டறிதல் API (AMED API) இடைமுகத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய பெண்கள் உரிமை ஆர்வலர் வர்ஷா தேஷ்பாண்டேவுக்கு தனிநபர் பிரிவில் 2025 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை விருது வழங்கப் பட்டுள்ளது.
- கேரளாவின் ஆலப்புழாவில் உள்ள அர்த்துங்கல் காவல் நிலையம் ஆனது, இந்தியத் தர நிலைகள் வாரியத்திலிருந்து IS/ISO 9001:2015 சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதல் காவல் நிலையமாக மாறியுள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளம் - செஞ்சிக் கோட்டை

- இது தற்போது யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளமாக சேர்க்கப் பட்டு

உள்ளது.

- விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டை மற்றும் 11 கோட்டைகள் யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளமாக அறிவிக்கப்பட்டுள்ளன.
- இது 'கிழக்கின் ட்ராய்' என்று அழைக்கப்படுகிறது.
- இது மராட்டிய இராணுவ நிலப்பரப்புகளின் ஒரு பகுதியாகும், மேலும் இந்த தகுதியைப் பெற்ற ஒரே தமிழக தளம் இதுவாகும்.
- பிரான்சின் பாரிசு நகரில் நடைபெற்று வரும் உலகப் பாரம்பரியக் குழுவின் (WHC) 47வது அமர்வின் போது இந்த முடிவு எடுக்கப்பட்டது.
- இந்தியாவின் மராட்டிய இராணுவ நிலப்பரப்புகளில் பல்வேறு புவியியல் பகுதிகளில் பரவி அமைந்துள்ள 12 கூறுகள் உள்ளன.
- மற்ற 11 தளங்கள் மகாராஷ்டிராவில் உள்ளன.
- இது இராஜகிரி, கிருஷ்ணகிரி மற்றும் சந்திரகிரி ஆகிய மூன்று மலைகளின் மேல் அமைந்துள்ளன.
- இது கி.பி 1,200 ஆம் ஆண்டில் கோனார் வம்சத்தைச் சேர்ந்த அனந்த கோன் என்பவரால் கட்டப்பட்டது.
- அவரது வாரிசு கி.பி 1,240 ஆம் ஆண்டில் வடக்கு மலையில் கோட்டையமைத்து அதனை கிருஷ்ணகிரி என்று அழைத்தார்.
- இது விஜயநகர நாயக்கர்கள், மராட்டியர்கள், முகலாயர்கள், நவாப்கள், பிரெஞ்சுக் காரர்கள் மற்றும் ஆங்கிலேயர்கள் போன்ற பல பேரரசுகளின் வசம் இருந்தது.




- செஞ்சி கோட்டையானது 1677 ஆம் ஆண்டில் சத்ரபதி சிவாஜி அவர்களால் கைப்பற்றப் பட்டது.
- 1698 ஆம் ஆண்டில் முகலாயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் வரை இது மராட்டிய ஆட்சியின் கீழ் இருந்தது.
- 1714 ஆம் ஆண்டில் ஆற்காடு நவாப்களால் கைப்பற்றப்படும் வரையில் சிறிது காலம் இராஜா தேசிங் (தேஜ் சிங்) இதை ஆட்சி செய்தார், பின்னர் 1749 ஆம் ஆண்டு வரை அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது.
- இந்தக் கோட்டையானது 1750 முதல் 1770 ஆம் ஆண்டு வரை பிரெஞ்சுக்காரர்களிடம் இருந்தது, பின்னர் ஆங்கிலேயர்களின் வசம் சிக்கியது.
- 11 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தக் கோட்டையில் ஒரு படிக்கட்டு கிணறு, ஒரு


கல்யாண மண்டபம், ஒரு தர்பார், ஒரு நீர் உட்செல்லும் அமைப்பு, ஒரு கடிகாரக் கோபுரம், ஒரு ஆயுதக் கிடங்கு, ஒரு யானை அமைப்புடைய தொட்டி, ஒரு தொழுவம், ஒரு தானியக் கிடங்கு, ஒரு உடற்பயிற்சிக் கூடம், வெங்கடரமண கோயில் மற்றும் சதத்துல்லா மசூதி ஆகியவை உள்ளன.

- இந்தக் கோட்டையில் நாயக்கர்கள் மற்றும் நவாப் காலத்தை ஒத்த இரண்டு விரிவான நீர் வழங்கீட்டு அமைப்புகள் இருந்தன.
- தமிழ்நாட்டின் மற்ற யுனெஸ்கோ தளங்களாவன, சோழர்கள் கோயில்கள், மாமல்ல புரத்தில் உள்ள நினைவுச் சின்னங்கள், நீலகிரி மலை இரயில் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகள் ஆகியனவாகும்.

# தேசியச் செய்திகள்

## மாவட்ட கனிம அறக்கட்டளை (DMF) திட்டம்

- மத்திய அரசானது, இலட்சியமிக்க மாவட்ட கனிம அறக்கட்டளை (DMF) என்ற ஒரு திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இந்தத் திட்டமானது, பெரிதும் சேவைகள் வழங்கப்படாத சுரங்கப் பகுதிகளில் சமூக-பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்காக என்று, DMF முன்னெடுப்புகளை இலட்சியமிக்க மாவட்ட திட்டம் (ADP) மற்றும் இலட்சியமிக்க தொகுதி திட்டங்கள் (ABP) ஆகியவற்றுடன் ஒருங்கிணைக்கிறது.
- சுரங்க நடவடிக்கைகளால் பெருமளவில் பாதிக்கப்பட்டப் பகுதிகளில் சுகாதாரம், கல்வி, உள் கட்டமைப்பு மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றிற்கு ஆதரவளித்துள்ள DMF முன்னெடுப்புகள் கூட்டுறவு கூட்டாட்சி முறையை எடுத்துக் காட்டுகின்றன.
- ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா மற்றும் ஒடிசா போன்ற சில மாநிலங்கள் திருத்தப்பட்ட பல்வேறு வழிகாட்டுதல்கள் மற்றும் சரியான நேரத்தில் தணிக்கைகளை ஏற்றுக் கொண்டதற்காக அங்கீகரிக்கப்பட்டன.




## மாநில அறிவியல் நிதியில் சீர்திருத்தம்

- நிதி ஆயோக் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) ஆனது மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சபைகளுக்கான முக்கிய மானிய ஆதரவைக் குறைத்து, திட்ட அடிப்படையிலான நிதிக்கு மாற வேண்டும் என்று பரிந்துரைக்கிறது.

- மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சபைகளின் நிதி ஒதுக்கீடுகளில் மத்திய நிதி ஒரு மிகச் சிறிய பங்கினையே கொண்டுள்ளதோடு இதற்கு எடுத்துக்காட்டாக, குஜராத் மாநில அரசானது மத்திய அரசிடமிருந்து 1.07 கோடி ரூபாயை மட்டுமே பெறுகிறது என்ற நிலையில் கேரள மாநில அரசு எந்த நிதியையும் பெறுவதில்லை.
- மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் சபைகளுக்கான நிதியானது சுமார் 17.65% என்ற அளவில் அதிகரித்துள்ளது, ஆனால் சிக்கிம், தமிழ்நாடு மற்றும் உத்தரகாண்ட் போன்ற சில மாநிலங்கள் நிதி ஒதுக்கீடுகளில் சரிவினைச் சந்தித்தன.




## TALASH தளம்




- NESTS மற்றும் UNICEF ஆகியவை தொழில் முறை வாழ்க்கைக்கான வழிகாட்டுதல் மற்றும் வாழ்க்கைத் திறன்களுக்கான ஒரு தளமான TALASH (பழங்குடியினர் திறனறிவு, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் சுயமரியாதை மையம்) என்ற ஒரு மையத்தினைத் தொடங்கியுள்ளன.
- தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (NCERT) இந்த தமன்னா என்ற

முன்னெடுப்பினால் ஈர்க்கப்பட்ட மனோவியல் மதிப்பீடுகளை TALASH முன்னெடுப்பு பயன்படுத்துகிறது.

- ❖ இதுவரையில், 75 ஏகலவ்யா மாதிரிக் குடியிருப்புப் பள்ளிகளில் இருந்து (EMRS) 189 ஆசிரியர்கள் TALASH திட்டத்திற்காக பயிற்சி பெற்றுள்ளனர்.
- ❖ கௌசல்யா திட்டத்திற்காக NESTS ஆனது டாடா மோட்டார்ஸ் நிறுவனத்துடன் ஐந்து ஆண்டு கால ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- ❖ கௌசல்யா திட்டம் ஆனது வேலைவாய்ப்புப் பயிற்சியுடன் இணைந்து பொறியியல் பட்டயப் படிப்பினை வழங்குகிறது.
- ❖ பழங்குடியின மாணவர்களுக்கான தேசிய கல்விச் சங்கம் (NESTS) ஆனது பழங்குடியின விவகார அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- ❖ ஏகலவ்யா மாதிரி குடியிருப்புப் பள்ளிகளில் (EMRS) பழங்குடியின மாணவர்களுக்கான கல்வி, வாழ்க்கைத் திறன்கள் மற்றும் வேலை வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக என NESTS முயற்சிகளைத் தொடங்கியது.
- ❖ இந்தத் திட்டங்கள் இந்தியா முழுவதும் உள்ள 130,000க்கும் மேற்பட்ட பழங்குடியின மாணவர்களுக்கு ஆதரவளிக்கும்.

## MVIS அமைப்புகள்





- ❖ இரயில் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக என்று இந்திய இரயில்வே நிர்வாகமானது, பிரத்தியேக சரக்கு வழித்தடக் கழகத்துடன் (DFCCIL) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ❖ இந்த ஒப்பந்தமானது செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரக் கற்றல் (ML) ஆகியவற்றைப் பயன்படுத்தி இயந்திர வழிக் கண்காணிப்பு அடிப்படையிலான ஆய்வு அமைப்புகளை (MVIS) நிறுவுவதற்கானதாகும்.
- ❖ MVIS ஆனது, இரயிலின் சுழல் இயக்கியின் உயர் தெளிவுத்திறன் படங்களைப் படம் பிடித்து, தொங்குகின்ற, தளர்வான அல்லது தவறிய பாகங்களை தானாகவே நன்கு கண்டறிகிறது.

- MVIS ஆனது செயல்பாட்டுப் பாதுகாப்பை மேம்படுத்துதல், கைமுறை ஆய்வுகளைக் குறைத்தல் மற்றும் விபத்துகள் மற்றும் சேவை இடையூறுகளைத் தடுப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பொதுப் பருவநிலை நிதி – 2023





- பருவநிலை கொள்கை முன்னெடுப்பு (CPI) என்ற ஆராய்ச்சி குழுவானது, அதன் 2025 ஆம் ஆண்டிற்கான உலகளாவிய பருவநிலை நிதி அறிக்கையை வெளியிட்டது.
- 2023 ஆம் ஆண்டில் உலகளாவியப் பருவநிலை நிதியானது ஒரு சாதனை அளவான 1.9 டிரில்லியன் டாலரை எட்டியதாக இந்த அறிக்கை கண்டறிந்துள்ளது என்பதோடு இது 2022 ஆம் ஆண்டில் இருந்ததை விட 15% அதிகமாகும்.
- தணிப்பு மற்றும் ஏற்பு சார்ந்த நன்மைகள் ஆகிய இரண்டையும் கொண்ட நிதியானது 2018 ஆம் ஆண்டு முதல் மூன்று மடங்காக அதிகரித்து, 2023 ஆம் ஆண்டில் 58 பில்லியன் டாலரை எட்டியது.
- தனியார் நிதியானது முதல் முறையாக சுமார் 1 டிரில்லியன் டாலர் மதிப்பினைத் தாண்டியது.
- மின்சார வாகனங்கள் (EV) மற்றும் மேற்கூரை சூரிய சக்தி நிறுவல் கொண்ட வீட்டு வசதி முதலீடுகளால் இது இந்த மதிப்பினை எட்டிய அதே நேரத்தில் பெரிய நாடுகளில் நிதி நெருக்கடியின் மத்தியில் பொது நிதி 8% குறைந்தது.
- பருவநிலை நிதியானது பிராந்திய ரீதியாக அதிகளவில் உள்ளதோடு, 79% ஆனது 89% நிதி உள்நாட்டில் இருந்து பெறப்பட்ட கிழக்கு ஆசியா மற்றும் பசிபிக் (பெரும்பாலும் சீனா), மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கா ஆகியவற்றிற்கு வழங்கப்படுகிறது.
- ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதி மற்றும் பிற உருவெடுத்து வரும் சந்தைகள் மற்றும் மேம்பட்ட நாடுகள் (EMDE) தங்கள் பருவநிலை நிதியில் சுமார் 23% மட்டுமே உள்நாட்டில் இருந்து பெற்றன.
- EMDE நாடுகளுக்கான சர்வதேச பொது நிதியானது 2018 ஆம் ஆண்டு முதல் சுமார் 196 பில்லியன் டாலராக இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

## நிதிச் சந்தைகளின் நிலையற்ற தன்மை

- UNCTAD அமைப்பின் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு முன்னறிவிப்புகள் 2025 அறிக்கை

ஆனது, 2024 ஆம் ஆண்டில் 2.8% ஆக இருந்த உலகளாவிய வளர்ச்சியானது 2025 ஆம் ஆண்டில் 2.3% ஆகக் குறையும் என்று கூறுகிறது.

- 2025 ஆம் ஆண்டில் நிலையற்றத் தன்மைக் குறியீடு (VIX) மிக அதிகமாக உள்ளதுடன் நிதிச் சந்தைகள் நிலையற்றவையாக உள்ளன.
- 2024 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விகிதக் குறைப்புகளுக்குப் பிறகும் நீண்ட காலக் கடன் செலவுகள் அதிகரித்து வருகின்றன.
- மிகக் குறைவான வருமானம் கொண்ட நாடுகளில் பாதிக்கும் மேற்பட்டவை 2025 ஆம் ஆண்டில் கடன் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.
- தெற்கு நாடுகளின் வர்த்தகம் மற்றும் ஆசிய நாடுகளுக்குள்ளான வர்த்தகம் இன்னும் வலுவாக உள்ளன.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய வளர்ச்சியில் கிழக்கு மற்றும் தெற்காசிய நாடுகள் 40 சதவீதத்திற்கும் அதிகமான பங்கினைக் கொண்டிருந்தன.
- 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளில் இந்தியா ஒரு முன்னணி வளர்ச்சி இயக்கியாக உள்ளது.
- கட்டணங்கள் மற்றும் குறைவான ஏற்றுமதிகள் காரணமாக 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் உலகளாவிய பொருட்களின் வர்த்தகம் குறைந்துள்ளது.
- ஆனால் இந்தியா, இந்தோனேசியா மற்றும் இலத்தீன் அமெரிக்காவில் எண்ணிமச் சேவைகளில் வர்த்தகம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது.
- செல்வ வளம் மிக்க நாடுகள் பாதுகாப்பு துறைக்காக அதிகமாக செலவிடுகின்றன.
- இதற்கிடையில், ஏழ்மை நிலையில் உள்ள நாடுகளுக்கான உதவியானது 2023 முதல் 2025 ஆம் ஆண்டு வரை 18% குறையும் என்பதோடு இது சுகாதாரம் மற்றும் கல்வியில் முன்னேற்ற நிலையை ஆபத்தில் ஆழ்த்தும்.





# மாநிலச் செய்திகள்

## உத்தரகாண்ட் மாநில அரசின் புவி வெப்பக் கொள்கை

- உத்தரகாண்ட் மாநில அரசானது அதன் முதல் புவிவெப்ப ஆற்றல் கொள்கைக்கு தனது ஒப்புதல் அளித்துள்ளது.
- நிலையான ஆற்றல், மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழல் இலக்குகளுக்கு இயற்கை சார்ந்த புவிவெப்ப நீரூற்றுகளின் ஆற்றலைப் பயன்படுத்துவதை இது முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தக் கொள்கையானது இமயமலைப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட 40 புவி

வெப்ப நீரூற்றுகளை தூய்மையான மின்சாரம், வெப்பமாக்கல் மற்றும் இதர பிறப் பயன்பாடுகளுக்குப் பயன்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது.

- இது ஐஸ்லாந்தின் வர்கிஸ் நிறுவனத்துடன் இணைந்து உயரமான இடங்களில் உள்ள புவி வெப்ப வளங்களை ஆராய்கிறது.
- உத்தரகாண்ட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மேம்பாட்டு முகமை (UREDA) மற்றும் உத்தரகாண்ட் ஜல் வித்யுத் நிகாம் லிமிடெட் (UJVNL) ஆகியவற்றால் இதன் அமலாக்கம் நிர்வகிக்கப் படுகிறது.




# முக்கிய தினங்கள்

## உலக கிஸ்வாஹிலி மொழி தினம் 2025 - ஜூலை 07




- இது அதன் சொந்த சர்வதேசத் தினத்தைப் பெற்ற முதல் ஆப்பிரிக்க மொழியாக 2022 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்டது.
- கிஸ்வாஹிலி மொழியானது உலகளவில் சுமார் 200 மில்லியனுக்கும் மிக அதிகமானப் பேச்சாளர்களுடன் உலகளவில் தடம் பதித்துள்ளது.
- 1954 ஆம் ஆண்டு ஜூலை 07 ஆம் தேதியன்று, காலனித்துவ ஆட்சியில் இருந்து தனது சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களுக்கான ஒற்றுமையின் ஒரு முக்கிய மொழியாக

கிஸ்வாஹிலி ஏற்றுக் கொள்ளப் பட்டது.

## உலக உயிரித் தயாரிப்பு தினம் 2025 - ஜூலை 07

- நமது அன்றாட வாழ்வில் உயிரித் தயாரிப்புகளின் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் நிலைத் தன்மை மற்றும் பருவநிலை நடவடிக்கை குறித்த முக்கிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உயிரிப் பொருட்கள் என்பது தொழில்துறைப் பொருட்கள், உணவு மற்றும் ஆற்றலை உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் தாவரங்கள் மற்றும் பாசிகள் போன்ற புதுப்பிக்கத் தக்க உயிரியல் வளங்களிலிருந்து பெறப்பட்ட தயாரிப்புகளைக் குறிக்கிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'The BioE3 Way' என்பதாகும்.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 300 பில்லியன் டாலர் மதிப்புள்ள உயிரிப் பொருளாதாரத்தினை உருவாக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★